[8th August 1955

Instructions regarding condemning certain models of public carriers and stage carriages.

* 2 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) the latest instructions given to Regional Transport Officers regarding condemning models of public carriers and stage-carriages;

(*b*) whether the Government are aware that there is agitation among lorry owners that they are affected by these instructions; and

(*c*) whether there is any proposal to modify these instructions?

THE HON. SRI B. PARAMESWARAN :—" (*a*) No instructions have been issued to condemn any particular model of public carriers or stage carriages. Motor vehicles which are too old do not satisfy the standards laid down for the full fitness certificate period of six months, particularly when they run on bad roads. In order to ensure efficiency in the maintenance of transport vehicles and public safety Transport authorities have been asked to observe a rigid standard of inspection in the case of older model vehicles when they come up for inspection. They have also been told that there should be no refusal of fitness certificates to vehicles on the only ground that the vehicles are of older models.

" (*b*) Yes, Sir. But the lorry owners have no ground for grievance in view of the answer to clause (*a*).

" (*c*) Does not arise in view of the answer to clause (*a*)."

9-30 a.m. SRI M. KALYANASUNDARAM :—" இந்த மாதிரியாக இப்பொழுது தீவிர சோதனை செய்து ரோடுகளில் போவதற்குத் தகுதியற்ற வண்டிகளை எல்லாம் உடனடியாகக் கண்டெம் செய்யவேண்டுமென்று சர்க்கார் உத்தரவு போட்டிருப்பதானது மிகவும் அபாயகரமானதாக இருக்கிறது. பிரேக் இன்ஸ்பெக்டர்கள் தங்கள் இஷ்டம்போல் நடக்க இது வசதி அளிக்கிறது. அந்த உத்திரவினால் சமீப காலத்தில் அநேக பஸ்களும், லாரிகளும் கண்டெம் செய்யப்பட்டு வருகிறது. அல்லது ஆறுமாத காலங்களுக்குள்ளாக அவற்றை ரிப்பேர் செய்யவேண்டுமென்று நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அவசியம் என்ன ? இந்த உத்திரவை சர்க்கார் ரத்து செய்வார்களா? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" ரோடுகளில் ஓடுகிற வண்டிகள் எல்லாம் நல்ல முறையில் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். முன்பு பழைய மாடல்களை எல்லாம் எடுத்துவிடவேண்டுமென்று ஐந்தாறு மாதங்களுக்கு முன்பு போட்டிருந்த உத்திரவு ரத்து செய்யப்பட்டுவிட்டது. ஆனால் இப்பொழுது சிறிய முதலாளி, பெரிய முதலாளி என்ற வித்தியாசம் எதுவுமே பாராட்டாமல் ரோடில் லாரிகள், கார்கள் எல்லாம் சரியாக இருக்கின்றதா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று பிரேக் இன்ஸ்பெக்டர்களுக்கு உத்திரவு போடப்பட்டிருக்கிறது. அப்படி உத்திரவு போடாமற் போனால் பிரயாணிகளுக்குத்தான் அதிக ஆபத்து எற்படும்."

8th August 1955]

Sri S. DAIVASIGAMONEY :—" Sir, may I know whether Government Transport buses and lorries are subject to such scrutiny by officers of the Government after they are put on the road? "

The Hon. Sri B. PARAMESWARAN :—" It is because we withhold a number of buses without putting them on the road till their condition was sound enough for putting them on the road that many of our buses are being repaired in the workshop."

Sri K. T. RAJU :—" கோயமுத்தூர் ஜில்லாவில் ஓடிக்கொண்டிருந்த பல லாரிகள் இந்த உத்திரவினால் கண்டெம் செய்யப்பட்டுவிட்டன. சில லாரிகாரர்களுக்கு, பழைய மாடலை மாற்றி புது மாடலாகப் புதுப்பிக்கவேண்டுமென்றும் உத்திரவு போடப்பட்டிருக்கிறது. இதனால் பல சிறு முதலாளிகள் கஷ்டப்படுகிறார்கள். இந்த உத்திரவை சர்க்கார் ரத்து செய்துவிடுவார்களா ? "

The Hon. Sri B. PARAMESWARAN :—" லாரிகளை சரியாக ரிப்பேர் செய்து கொடுத்துவிட்டால் எதற்காக அவற்றைக் கண்டெம் செய்யப்போகிறார்கள் ? சரியாக இல்லாத லாரிகளை எப்படி ரோடுகளில் ஓடுவதற்கு உத்திரவு கொடுப்பார்கள் ? "

Sri P. SELVARAJ :—" Sir, when such of the old buses as are given permission to ply are not able to carry even the minimum passenger weight, may I know why the Government have allowed standing passengers? "

The Hon. Sri B. PARAMESWARAN :—" Sir, that has got nothing to do with the main question."

Sri M. KALYANASUNDARAM :—" இந்த மாதிரி உத்திரவு போட்டதற்குக் காரணம் என்னவென்று கேட்டேன். கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லவில்லை. சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய அறிக்கையிலும் அதிகாரிகளுக்கு இந்த உத்திரவு போட்டிருப்பதற்குக் காரணம் கொடுக்கக் காணோம். அப்படியிருக்கும்போது இந்த மாதிரி உத்திரவு போட்டதற்குக் காரணம் என்ன ? வெளி நாடுகளிலிருந்து கார்கள் நிறைய இறக்குமதி செய்யப்படவேண்டியிருக்கிறது. எவ்வளவு அதிக பட்சம் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறோமோ அவ்வளவு உபயோகமும் நன்மையும் அதனால் ஏற்படும். ஆகவே வெளிநாடுகளிலிருந்து கார்களை இறக்குமதி செய்யக் கூடிய பெரிய முதலாளிகளின் நன்மையைக் குறித்து இந்த உத்திரவு போட்டிருக்கிறார்களா ? "

The Hon. Sri B. PARAMESWARAN :—" சரியான நிலைமையில் இருக்கக்கூடிய வண்டிகள்தான் ரோடுகளில் போகவேண்டுமென்பதற்காக இந்த உத்திரவு போடப்பட்டிருக்கிறதே தவிர மாடல்பற்றி போடப்பட்டிருந்த உத்திரவு வாபஸ் பெறப்பட்டுவிட்டது. ஐந்தாறு மாதங்களுக்கு முன்னால் மாடல் பற்றிய பிரச்னை இருந்தது. அது இப்பொழுது ரத்து செய்யப்பட்டுவிட்டது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

Sri K. R. SAMBANDAM :—" எந்த மாதிரியான மாடல் கார்களுக்கு அனுமதி தரப்படுகிறது ? எந்த வருஷ மாடல் கார்கள் அனுமதிக்கப்படுமென்று சர்க்கார் விதித்திருக்கிறார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ? "

The Hon. Sri B. PARAMESWARAN :—" மாடல் பற்றி இப்பொழுது கேள்வியே இல்லை. ஐந்தாறு மாதங்களுக்கு முன்னால் தான் இப்பிரச்னை இருந்தது என்று சொன்னேன். இப்பொழுது

வண்டிகள் சரியாக இருந்தாலேயே உத்திரவு கொடுக்கப்படும். வண்டி சரியாக இல்லாவிட்டால் தான் அதை ரோடுகளில் ஓட விடாமல் கண்டெம் செய்யவேண்டுமென்று உத்திரவு போட்டிருக்கிறோம்."

SRI B. K. NALLASWAMI :—" Arising out of the answer given by the Minister, may I ask whether the accidents are mainly due to overspeeding of the lorries and not to other factors and, if so, may I know whether the Government have passed orders to control overspeeding of these lorries? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, though the hon. Member's supplementary does not relate to the main question, I may tell him that instructions have already been issued that there should be a watch over this overspeeding."

SRI M. KALYANASUNDARAM :—" கனம் அமைச்சர் அவர்கள், ' ஆரம்பத்தில் போட்ட உத்திரவை, அதாவது மாடல் பற்றிய உத்திரவை வாபஸ் வாங்கிக்கொண்டுவிட்டோம். ஆனால் வண்டிகளை சரியான நிலையில் இருக்கின்றனவா என்பதைப்பற்றி மட்டும் பரிசீலனை செய்யும்படியாக உத்திரவு போட்டிருக்கிறோம் ' என்று சொன்னார்கள். இந்த உத்திரவுதான் பெரிய ஆபத்தாக இருக்கிறது. எந்த வண்டி ரோடில் ஓடுவதற்கு லாயக்கானது, எந்த வண்டி ஓடுவதற்கு லாயக்யற்றது எனத் தீர்ப்பு அளிக்கும் உரிமை பிரேக் இன்ஸ்பெக்டர் கையில் இருக்கிறது. சாதாரணமாக ஒவ்வொரு வண்டியும் பிரேக் இன்ஸ்பெக்டர் பரிசீலனைக்குப் போவது வழக்கம். இப்பொழுது விசேஷமாக இந்த உத்திரவு பிறப்பிக்கவேண்டிய அவசியம் என்ன என்று தான் கேட்க விரும்புகிறேன் ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" இந்த உத்திரவு முன்னாலேயே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எல்லா பஸ் முதலாளிகளையும், லாரி முதலாளிகளையும் 1948-ம் வருஷ மாடலையே வைத்துக் கொள்ள வற்புறுத்தினோம். அதை வற்புறுத்த வேண்டாமென்று இப்பொழுது உத்திரவு போட்டிருக்கிறோம். எந்த வண்டிகளாக இருந்தாலும் பிரேக் இஸ்பெக்டர் வண்டி சரியான நிலைமையில் இருக்கிறது என்று சர்டிபிகேட் கொடுத்தால்தான் வண்டிகள் ரோடுகளில் ஓட முடியும். நல்ல வண்டிகளாக இருந்தால் எதற்காக பிரேக் இன்ஸ்பெக்டர்கள் அவற்றை கண்டம் செய்கிறார்கள் ? "

SRI B. K. NALLASWAMI :—" Sir, in view of the fact that the Government Order has practically no effect on the officers concerned, will the Government consider the question of controlling overspeeding by an automatic arrangement . . ."

MR. SPEAKER :—" The main question does not relate to overspeeding."

SRI B. K. NALLASWAMI :—" Sir, I just want to know whether the Government will be prepared to order installation of governor to control overspeeding? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, I have already stated that instructions have been issued in this respect. "

MR. SPEAKER :—" Questions are over."

SRI P. CHELLATHURAI :—" குறைந்த அறிவிப்பு வினாத் தாளிலே கண்டுள்ள முதலாவது கேள்விக்கு சபையில் பதிலளிக்கப்படவில்லையே. அதற்குக் காரணம் அறியலாமா ? "

MR. SPEAKER :—" முதல் கேள்வியைப் போட்டவர், தான் அக் கேள்வியை சபையில் போடவில்லை என்று சொல்லிவிட்டார்."